செ.வெ.எண்.27 நாள்: 07.09.2017

**திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி கூட்டரங்கில் தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளை இணைத்து, தாமிரபரணி ஆற்றின் உபரி வெள்ளநீரை கன்னடியன் கால்வாயிலிருந்து வெள்ளக்கால்வாய் மூலம் திசையன்விளை மற்றும் சாத்தான்குளம் ஆகிய வறட்சிப் பகுதிகளுக்கு கொண்டு செல்லும் திட்டம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி கூட்டரங்கில் நீர்வள ஆதாரத்துறையின் சார்பில் தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளை இணைத்து, தாமிரபரணி ஆற்றின் உபரி வெள்ளநீரை கன்னடியன் கால்வாயிலிருந்து வெள்ளக்கால்வாய் மூலம் திசையன்விளை மற்றும் சாத்தான்குளம் ஆகிய வறட்சிப் பகுதிகளுக்கு கொண்டு செல்லும் திட்டம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இத்திட்டப்பணிகளில் நிலை-1 மற்றும் நிலை-2 ஆகிய பணிகள் நடைபெற்று வரும் விபரங்கள, முடிக்கப்பட்டுள்ள விபரங்கள் குறித்தும், நிலை-3 பணிகளுக்கு நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் நில அளவைப்பணிகளை விரைந்து செய்தல் தொடர்பாகவும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழக அரசின் மிக முக்கியத் திட்டமாக தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளை இணைத்து, தாமிரபரணி ஆற்றின் உபரி வெள்ளநீரை கன்னடியன் கால்வாயிலிருந்து வெள்ளக்கால்வாய் மூலம் திசையன்விளை மற்றும் சாத்தான்குளம் ஆகிய வறட்சிப் பகுதிகளுக்கு கொண்டு செல்லும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.872 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு நான்கு கட்டங்களாக பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரிலிருந்து திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம், எம்.எல்.தேரி ஆகிய வறட்சி பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இப்பணிகளை விரைவு படுத்தும் வகையில் இன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. முதல் மற்றும் இரண்டாம் கட்ட பணிகள் 50 சதவிகித அளவிற்கு முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் 6 மாத காலத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 3-வது கட்ட பணிகளுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றது. சுமார் 2000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவுள்ளது. இப்பணிகளுக்காக 6 வட்டாட்சியர்கள் தலைமையிலான குழு அமைக்கப்பட்டு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. 3 மாத காலத்திற்குள் இப்பணிகளை முடிக்கவும், 3வது கட்ட பணிகளை ஓராண்டிற்குள் முழுமையாக முடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் 23,040 ஹெக்டேர் நிலங்கள் பயன்பெறும். 252 பாசன குளங்களுக்கு நீர் நிரப்பப்படும். இதன் மூலம் தாமிரபரணி ஆற்றின் உபரி நீர் வறட்சிப் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு இப்பகுதி மக்களின் பொருளாதார மேம்பாடு அடையும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., சேரன்மகாதேவி கோட்டாட்சியர் (பொ) திரு.புண்ணியகோட்டி, நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளர்கள் (நாங்குநேரி) திரு.ஞானசேகரன், (திருநெல்வேலி) திரு.சேகர், (வள்ளியூர்) திரு.அப்பாஸ் அலி, உதவி செயற்பொறியாளர்கள் (நாங்குநேரி) திரு.வேலையா, (திருநெல்வேலி) திரு.கணபதி ரமேஷ், (நாங்குநேரி) திரு.சுதா, நதிநீர் இணைப்பு துணை ஆட்சியர் திரு.மகேஷ், திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.பாபு, வட்டாட்சியர்கள் (இராதாபுரம்) திரு.ரவிக்குமார், (நாங்குநேரி) திரு.மாரியப்பன், முக்கிய பிரமுகர்கள் திரு.அந்தோணி அமலராஜா, திரு.சுடலைமணி, திரு.அருண்புனிதன், திரு.ஜெயக்குமார், திரு.ஊசிக்காட்டான், திரு.நிம்மலேஸ், திரு.பொன்இசக்கி மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி